# திருமங்கையாழ்வார் அருளிச் செய்த
# பெரிய திருமொழி
# ஏழாம் பத்து

## ஆறாம் திருமொழி - சிங்கமதாய்
## திருவழுந்தூர் 2

** சிங்கம் அதாய் அவுணன் * திறல் ஆகம் முன் கீண்டுகந்த *
சங்கம் இடத்தானைத் * தழல் ஆழி வலத்தானை **
செங்கமலத்து அயன் அனையார் * தென்னழுந்தையில் மன்னி நின்ற *
அங்கமலக் கண்ணனை * அடியேன் கண்டு கொண்டேனே 1

கோவானார் மடியக் * கொலை ஆர் மழுக் கொண்டருளும் *
மூவா வானவனை * முழு நீர் வண்ணனை ** அடியார்க்கு
ஆவா! என்று இரங்கித் * தென்னழுந்தையில் மன்னி நின்ற *
தேவாதி தேவனை * யான் கண்டு கொண்டு திளைத்தேனே 2

உடையானை * ஒலி நீர் உலகங்கள் படைத்தானை *
விடையான் ஓட அன்று * விறல் ஆழி விசைத்தானை **
அடையார் தென்னிலங்கை அழித்தானை * அணி அழுந்தூர்
உடையானை * அடியேன் அடைந்து உய்ந்து போனேனே 3

குன்றால் மாரி தடுத்தவனைக் * குல வேழம் அன்று
பொன்றாமை * அதனுக்கு அருள் செய்த போர் ஏற்றை **
அன்று ஆவின் நறுநெய் அமர்ந்து உண்ண * அணி அழுந்தூர்
நின்றானை * அடியேன் கண்டு கொண்டு நிறைந்தேனே 4

கஞ்சனைக் காய்ந்தானைக் * கண்ணமங்கையுள் நின்றானை *
வஞ்சனப் பேய் முலையூடு * உயிர் வாய் மடுத்து உண்டானை **
செஞ்சொல் நான்மறையோர் * தென்னழுந்தையில் மன்னி நின்ற *
அஞ்சனக் குன்றம் தன்னை * அடியேன் கண்டு கொண்டேனே 5

பெரியானை * அமரர் தலைவற்கும் பிரமனுக்கும் *
உரி யானை உகந்தான் அவனுக்கும் * உணர்வதனுக்கு
அரியானை ** அழுந்தூர் மறையோர்கள் * அடி பணியும்
கரியானை * அடியேன் கண்டு கொண்டு களித்தேனே 6

திருவாழ் மார்வன் தன்னைத் * திசை மண் நீர் எரி முதலா *
உருவாய் நின்றவனை * ஒலி சேரும் மாருதத்தை **
அருவாய் நின்றவனைத் * தென்னழுந்தையில் மன்னி நின்ற *
கருவார் கற்பகத்தைக் * கண்டு கொண்டு களித்தேனே 7

நிலை ஆளாக * என்னை உகந்தானை * நிலமகள் தன்
முலை ஆள் வித்தகனை * முது நான்மறை வீதி தொறும் **
அலை ஆரும் கடல் போல் முழங்கும் * தென்னழுந்தையில் மன்னி நின்ற *
கலை ஆர் சொற்பொருளைக் * கண்டு கொண்டு களித்தேனே 8

** பேரானைக் * குடந்தைப் பெருமானை * இலங்கொளி சேர்
வாரார் வனமுலையாள் * மலர் மங்கை நாயகனை **
ஆரா இன்னமுதைத் * தென்னழுந்தையில் மன்னி நின்ற *
காரார் கருமுகிலைக் * கண்டு கொண்டு களித்தேனே 9

** திறல் முருகன் அனையார் * தென்னழுந்தையில் மன்னி நின்ற *
அற முதல்வன் அவனை * அணி ஆலியர் கோன் மருவார் **
கறை நெடுவேல் வலவன் * கலிகன்றி சொல் ஐயிரண்டும் *
முறை வழுவாமை வல்லார் * முழுதாள்வர் வான் உலகே 10

**அடிவரவு:** சிங்கமது கோ உடையானை குன்றால் கஞ்சனை பெரியானை திருவாழ் நிலை பேரானை திறல் திரு

**திருமங்கையாழ்வார் திருவடிகளே சரணம்**